**செய்தி வெளியீடு எண்:744** **நாள்: 03.11.2017**

# செய்தி வெளியீடு

இன்று (3.11.2017) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்களும், மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் திருமதி வி.எம். ராஜலட்சுமி அவர்களும், சென்னை மாநகரில் அண்மையில் பெய்துவரும் பெருமழையினால் பாதிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–12 ன் கீழ் வார்டு எண். 156 முதல் 167 வரையிலான வார்டுகளில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் குறித்து பல்வேறு துறை அலுவலர்களுடன் ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், 12வது மண்டலத்திற்குட்பட்ட பல்வேறு வார்டுகளில் மழையினால் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு, அதன் மீது எடுக்கப்பட்ட மீட்பு நடவடிக்கைகள், தாழ்வான பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டது ஆகியவற்றை ஆய்வு செய்தார்கள். மேலும், இப்பகுதிகளில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டதற்கான காரணங்கள் அதனை நிரந்தரமாக தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அலுவலர்களுடன் விவாதித்து அறிவுரை வழங்கினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டம் முடிவுற்ற பின், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12ன் கீழ் வெகுவாக பாதிக்கப்பட்ட வார்டு 157ல் உள்ள ஆற்று முகப்பில் உள்ள பாலம் (River View Bridge) , வார்டு 162 மற்றும் 165க்குட்பட்ட தில்லை கங்கா நகர் 27வது தெரு தாழ்வாக உள்ள பகுதிகளில் தேங்கியுள்ள நீரை ராட்சச இயந்திரம் மூலம் வெளியேற்றும் பணி, 162வது வார்டுக்கு

உட்பட்ட ராம்நகர் முதல் பிரதான சாலையில் உள்ள கால்வாயில் நீர்தேங்கா வண்ணம் பொக்லைன் இயந்திரம் மூலம் நடைபெற்று வரும் சீரமைப்பு பணிகள், தில்லை கங்கா நகர் இரண்டாவது பிரதான சாலையில் மழைநீர் அடைப்பு இல்லாமல் செல்லும் வண்ணம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள், கண்ணன் காலனியில் தேங்கியுள்ள மழைநீரை பார்வையிட்டு அவை விரைவாக வெளியேறும் வகையில் கால்வாய்களை அகலப்படுத்தும் பணியை துரிதமாக மேற்கொள்வதற்கும் தக்க அறிவுரைகளை வழங்கினார்கள். மேலும் இப்பகுதிகளில் பாதிக்கப்பட்ட பொது மக்கள் மற்றும் குழந்தைகளுக்கு மருத்துவ உதவி, பிரெட் மற்றும் உணவு ஆகியவற்றையும் வழங்கினார்கள்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த பகுதி அலுவலர்கள் தொடர்ந்து பணிகளில் விழிப்புடன் ஈடுபட்டு, துரிதமாக செயலாற்ற தக்க ஆலோசனைகளை வழங்கினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டம் மற்றும் கள ஆய்வில் மண்டல நிவாரணப் பணிகளுக்கான கண்காணிப்பு அலுவலராக தமிழக அரசினால் நியமிக்கப்பட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை அரசு துணைச் செயலாளர் திரு கிரண் குராலா, இ.ஆ.ப., அவர்களும், பெருநகர சென்னை மாநகராட்சி 12வது மண்டல அலுவலர் திரு க. ராமமூர்த்தி அவர்களும், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய பகுதி அலுவலர்கள், தமிழ்நாடு மின்வாரிய அலுவலர்கள், நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித் துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**